DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No. 204/2024**

| | | | |
|---|---|---|---|
| அ.சா . | : 13 | நாள் | : 01.08.2025 |
| பெயர் | : டாக்டர் பிரசன்னா | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 01st day of August 2025.

எதிரிகள் ஆஜர்

**சாட்சி காணொளி காட்சி மூலம் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரசு கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சட்ட சார்ந்த மருத்துவத்துறையில் போதகராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.08.2021 அன்று நான் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத் துறையில் உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் பிற்பகல் 1 மணியளவில் குருவிகுளம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்து கு.எண்.239/2021 வழக்கில் சம்பந்தப்பட்ட 35 வயதுடைய லட்சுமணத்துரை என்பவரின் சடலத்தை தலைமைக்காவலர் பெரியராஜ்

என்பவர் மூலம் கிடைக்கப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் பிரேத பரிசோதனையை துவக்கினேன். இறந்த நபர் PLHA (Person Living with HIV / AIDS) என்ற நுண் கிருமியால் பாதிக்கப்பட்ட நபர் என்பதால் வெளிப்புற பரிசோதனையை 12.08.2021 அன்று பிற்பகல் 1.30 மணியளவில் துவக்கினேன். பிரேதமானது பிரேதத்தின் மரண விரைப்பு உடல் முழுவதிலும் காணப்பட்டது. வெளிப்புற பரிசோதனை அன்றைய தினம் பிற்பகல் 1.30 மணியளவில் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத் துறையில் பரிசோதித்தேன். பிரேதமானது மிகச் சாதாரண உடல் அமைப்புடன் இளைத்த உடல் தோற்றத்தில் காணப்பட்டது. கை மற்றும் கால் விரல் நகங்கள் வெளிறிய நிலையில் இருந்தது. அவரது சட்டையில் காய்ந்த இரத்த கறை காணப்பட்டது. இடது மணிக்கட்டு இடது உள்ளங்கை மற்றும் இடது காலில் மருத்துவமனையில் போடப்பட்ட கட்டு காணப்பட்டது. வலது தோள் பட்டையில் இறப்பிற்கு பின் தோல் உரிந்த நிலையில் காணப்பட்டது. இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு

1) ஒரு சாய்வான ஆழமான பலமான வெட்டுக்காயம் 14x1x எலும்பு ஆழம் வரையிலான ஒரு காயம் வலது கையில் வலது மேல்கையில் முன்புறத்தின் அடிப்பகுதியில் காணப்பட்டது. அதனடியிலிருந்த திசுக்கள் இரத்த நாளாங்கள், மற்றும் வலது முன்கை எலும்பு வெட்டுப்பட்டு காணப்பட்டது.

2) கிடைமட்ட நிலையிலான ஒரு பலமான வெட்டுக்காயம் 8x1x பகுதி ஆழம் வரை இடது உள்ளங்கையில் காணப்பட்டது. அது மணிக்கட்டுக்கு 5 செ.மீட்டருக்கு கீழாக அமைந்திருந்தது. அதனடியிலிருந்த திசுக்கள் இரத்த நாளாங்கள், மற்றும் இடது கை எலும்புகள் வெட்டுப்பட்டு காணப்பட்டது.

3) ஒரு வெட்டுக்காயம் 6x1x1 செ.மீ. அளவில் இடது காலின் வெளிப்புறத்தில் காணப்பட்டது அது இடது கணுக்காலுக்கு 15 செ.மீ. மேலாக காணப்பட்டது.

4) ஒரு சீராய்ப்பு காயம் 2x1 செ.மீ. அளவில் வலது கன்னத்தில் காணப்பட்டது. அது வலது கண்ணுக்கு 1 செ.மீ. வலது புறமாக காணப்பட்டது.

5) ஒரு சீராய்ப்பு காயம் 2x1 செ.மீ. அளவில் வலது கன்னத்தில் காணப்பட்டது அது வலது கண்ணுக்கு 3 செ.மீ. கீழாக காணப்பட்டது.

6) ஒரு சீராய்ப்பு காயம் 4x3 செ.மீ. அளவில் வலது தாடையில் காணப்பட்டது அது கீழ் உதட்டிற்கு 4 செ.மீ. வலது புறமாக காணப்பட்டது.

7) ஒரு சீராய்ப்பு காயம் 4x2 செ.மீ. அளவில் வலது தோள் பட்டையில் முனையில் காணப்பட்டது.

8) ஒரு சீராய்ப்பு காயம் 3x2 செ.மீ. அளவில் வலது மணிக்கட்டின் பின்புறம் காணப்பட்டது.

9) ஒரு சீராய்ப்பு காயம் 4x1 வலது உள்ளங்கையின் பின்புறம் காணப்பட்டது.

10) ஒரு சீராய்ப்பு காயம் 6x4 செ.மீ. அளவில் வலது பிட்டியின் வெளிப்புறம் அமைந்திருந்தது. PLHA (Person Living with HIV / AIDS) என்ற நுண் கிருமியால்

பாதிக்கப்பட்ட நபர் என்பதால் அரசு வழிகாட்டுதலின்படி 72 மணி நேரத்திற்கு பின்னர் சடலக்கூராய்வு செய்யப்பட வேண்டுமென்பதால் 15.08.2021 அன்று மதியம் 12.30 மணிக்கு சடலக்கூராய்வை மேற்கொண்டேன். நான் சடலத்தை கூராய்வு செய்தபோது சடலம் ஆரம்ப கட்ட அழுகிய நிலையில் காணப்பட்டது. இறப்பிற்கு பின் ஏற்பட்ட கொப்புலங்கள் உடல் முழுவதும் காணப்பட்டது.

<u>இதர கண்டறிவுகள்</u>

மார்பக அறை மற்றும் வயிற்று பகுதி பரிசோதனையில் எந்த வித திரவமும் இன்றி காணப்பட்டது. இருதயம் மிருதுவாகவும், இருதய இரத்த நாளங்கள் சீராகவும் காணப்பட்டது. நாவடி எலும்பு சீராக காணப்பட்டது. இரைப்பையில் 500 கிராம் வெள்ளை நிற பாதி செரிமானமான உணவுப்பொருள் இருந்தது அதில் குறிப்பிடத்தக்க வாடை ஏதும் இல்லை. அதன் உட்புறம் ஆரம்பகட்ட அழுகிய நிலையில் இருந்தது. நுரையீரல் , கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம், மூளை மிருதுவாகவும், ஆரம்பகட்ட அழுகிய நிலையில் காணப்பட்டது. சிறுகுடலில் 200 கிராம் அளவிலான வெள்ளை நிற பகுதியான சேமித்த உணவுப்பொருள் காணப்பட்டது அதில் குறிப்பிடத்தக்க வாடை ஏதும் இல்லை. அதன் உட்புறம் ஆரம்ப கட்ட அழுகிய நிலையில் காணப்பட்டது. சிறுநீரக பையில் 10 மில்லி அளவிலான சிறுநீர் திரவம் காணப்பட்டது. உள்ளுறுப்புகள் இரசாயண பகுப்பாய்வுக்கு ஒப்படைக்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட நபர் வலது மற்றும் இடது கையில் ஏற்பட்ட பலமான வெட்டுக்காயத்தின் பின் விளைவுகளால் இறந்திருக்கக்கூடும்

என்று சடலக்கூராய்வு அறிக்கை வழங்கினேன். காயம் எண்.1 மற்றும் 2 மரணத்தை விளைவிக்கக்கூடிய காயம் என்று குறிப்பிட்டேன். 1,2 ,3 காயங்கள் அரிவாளால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் அதற்கும் வாய்ப்புள்ளது. ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.16 ஆகும். நான் வழங்கிய சடலக்கூராய்வு அறிக்கை அ.சா.ஆ.17 ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**வழக்கறிஞர் காணொளி காட்சி மூலம் ஆஜராகி எதிரிகள் தரப்பில் கு.வி.**

புலனாய்வு அலுவலர் என்னிடம் ஆயுதங்களை காட்டி கருத்துக் கேட்டாரா என்று தற்போது ஞாபகமில்லை. 1 முதல் 3 காயங்களை Non Vital பகுதி என்றால் சரிதான். காயங்களிலிருந்து மிகையான இரத்தம் வெளியேறி இருந்தால் மட்டும்தான் மரணம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபர் காயம்பட்டவுடன் உயிரிழந்திருக்க இயலாது என்றால் சரிதான். ஏனென்றால் நான் Non Vital பகுதி அல்ல என்பதால் அவ்வாறு ஏற்பட்டிருக்க இயலாது.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி சென்னை மாநகர ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி காட்சி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் U.உமாதேவி (Assistant Programmer), City Civil and Sessions Court, Chennai என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் முதல் நிலை எழுத்தர் நிலை எண்-1 முருகன் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.08.01 17:39:06 +0530